செய்தி வெளியீடு எண்: 172 நாள்: 27.02.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.2.2019) தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த திட்டங்களில் 14,071 கோடி ரூபாய் முதலீட்டில் 12,294 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடிய 12 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள். மேலும், 2015–ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த திட்டத்தின்படி, திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்கா மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் கடப்பாக்கம் கிராமம் ஆகிய இடங்களில் 180 கோடி ரூபாய் முதலீட்டில் 170 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள Sheng Long Biotech India Pvt. Ltd., நிறுவனத்தின் வணிக உற்பத்தியை துவக்கி வைத்தார்கள்.

சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ஜனவரி 23 மற்றும் 24 ஆகிய நாட்களில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ல் சுமார் 10.5 லட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையிலும், 3,00,431 கோடி ரூபாய் அளவிலான முதலீட்டினை ஈர்க்கும் வகையிலும் 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. உலகெங்கிலும் இருந்து சுமார் 9000–க்கும் மேற்பட்ட பன்னாட்டு அரசு பிரதிநிதிகள், பன்னாட்டு தொழில் அதிபர்கள், பன்னாட்டு நிறுவன நிர்வாகிகள், எனப் பலர் பங்குபெற்ற இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாடு தமிழ்நாடு தொழில் துறை வரலாற்றில் ஒரு புதிய மைல்கல்லாகவும், தொழில் துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்கி வருவதற்கு சான்றாகவும் அமைந்துள்ளது.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ல் கையெழுத்திடப்பட்ட கீழ்க்கண்ட புரிந்துணர்வு ஒப்பந்த திட்டங்களான;

Hyundai நிறுவனம் காஞ்சிபுரம் மாவட்டம்– இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் 7000 கோடி ரூபாய் முதலீட்டில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு

அளிக்கும் வகையில் புதிதாக துவங்கப்படவுள்ள அந்நிறுவனத்தின் மின் சக்தி பேட்டரி கார் உற்பத்தி தொழிற்சாலை மற்றும் கார் உற்பத்தி தொழிற்சாலையின் விரிவாக்கத் திட்டம்;

MRF நிறுவனம் பெரம்பலூர் மாவட்டம் – ஆலத்தூர் வட்டம், நாரணமங்கலம் கிராமத்தில் 3100 கோடி ரூபாய் முதலீட்டில் 800 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டயர் உற்பத்தி விரிவாக்கத் திட்டம்;

Sundaram Clayton Group ஓசூர் மற்றும் ஒரகடம் ஆகிய இடங்களில் அமையவுள்ள 1200 கோடி ரூபாய் முதலீட்டில் 800 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க கூடிய வகையில் இரு சக்கர வாகனம் மற்றும் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் விரிவாக்கத் திட்டம்;

Wheels India Ltd. நிறுவனம், திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்க்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்காவில் 600 கோடி ரூபாய் முதலீட்டில் 1800 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க கூடிய வகையில் புதிதாக துவங்கப்படவுள்ள அந்நிறுவனத்தின் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் திட்டம்;

Mando Automotive India Ltd,. நிறுவனம் காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை, பிள்ளைப்பாக்கம் சிப்காட் தொழிற் பூங்காவில் 844 கோடி ரூபாய் முதலீட்டில் 680 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புதிதாக துவங்கப்படவுள்ள வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் திட்டம்;

Salcomp Manufacturing India Pvt. Ltd. நிறுவனம் காஞ்சிபுரம் மாவட்டம், Nokia Telecom சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் 5600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கைபேசி மின்னேற்றிகள் உற்பத்தி செய்யும் விரிவாக்கத் திட்டம்;

Lakshmi Machine Works Limited (LMW) நிறுவனம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 600 கோடி ரூபாய் முதலீட்டில் 230 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் துணிநூல் இயந்திரங்கள் உற்பத்தி ஆலையினை விரிவாக்கம் செய்யும் திட்டம் மற்றும் புதிதாக துவங்கப்படவுள்ள வானூர்தி மற்றும் பாதுகாப்பு தளவாட உதிரி பாகங்கள் தயாரிக்கும் திட்டம்;

Roots industries India Limited நிறுவனம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 23 கோடி ரூபாய் முதலீட்டில் 305 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புதிதாக துவங்கப்படவுள்ள மருத்துவம், வானூர்தி, வாகனம் மற்றும் பிற பொறியியல் தொழில்களில் அதிநுட்ப பாகங்கள் தயாரிக்கும் திட்டம்;

Roots Multiclean Limited நிறுவனம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 45 கோடி ரூபாய் முதலீட்டில் 104 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தொழிற்சாலைகள், நகர சாலைகள், விமான ஓடு பாதைகள் மற்றும் வீடுகள் உள்ளிட்ட இடங்களை சுத்தம் செய்யும் அதிநவீன கருவிகளை உற்பத்தி செய்யும் திட்டம்;

Pure Chemicals நிறுவனம், திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்காவில் 20 கோடி ரூபாய் முதலீட்டில் 75 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புதிதாக துவங்கப்படவுள்ள சிறப்பு வேதிப் பொருட்களை உற்பத்தி செய்யும் திட்டம்;

JS Auto cast Foundries India Pvt., Ltd., ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழிற்பூங்காவில் 39 கோடி ரூபாய் முதலீட்டில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புதிதாக துவங்கப்படவுள்ள வாகன உற்பத்திக்கான வார்பட பாகங்களை உற்பத்தி செய்யும் திட்டம்;

SASTRA நிகர்நிலை பல்கலைக்கழகம், தஞ்சாவூர் மாவட்டத்தில் 100 கோடி ரூபாய் முதலீட்டில் 900 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் உயர் கல்விக்கான தங்கும் விடுதி வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த கல்விக்கூடம் அமைக்கும் திட்டம்;

என மொத்தம் 14,071 கோடி ரூபாய் முதலீட்டில் 12,294 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடிய 12 திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், 2015–ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த நிறுவனங்களில் ஒன்றான Sheng Long Biotech India Pvt. Ltd., நிறுவனம், திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்கா மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் கடப்பாக்கம் கிராமம் ஆகிய இடங்களில் 180 கோடி ரூபாய் முதலீட்டில் 170 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்

வகையில் புதிதாக நிறுவியுள்ள தொழிற்சாலையின் வணிக உற்பத்தியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன். இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. ந. முருகானந்தம், இ.ஆ.ப,, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவன இயக்குநர் டாக்டர் கே.பி. கார்த்திகேயன், இ.ஆ.ப., தொழில்துறை துணைச் செயலாளர் திரு.கே. பாலசுப்பிரமணியம், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவன செயல் துணைத் தலைவர் திரு.எம். வேல்முருகன், பன்னாட்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**